செய்தி வெளியீடு எண் : 110 நாள் : 17.01.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.**

மதுரை மாவட்டத்தில் தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆண்டு தோறும் ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 15.01.2023 அன்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு, 16.01.2023 அன்று பாலமேடு ஜல்லிக்கட்டு, 17.01.2023 அன்று அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு என முறையே நடத்திட திட்டமிடப்பட்டு முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இன்று (17.01.2023) அலங்காநல்லூரில் நடைபெற்ற உலகப்புகழ் பெற்ற "அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா"-வில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். காலை 7.45 மணியளவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற மாடு பிடி வீரர்கள் 'பாதுகாப்பான ஜல்லிக்கட்டு' உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். மேலும், பல்வேறு சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும், காளைகளுக்கும் தங்க மோதிரம் மற்றும் தங்க நாணயங்களை பரிசாக வழங்கினார்கள்.இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் மொத்தம் 10 சுற்றுகள் நடத்தப்பட்டு வாடிவாசலில் இருந்து 825 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. மேலும் 465 மாடு பிடி வீரர்களும் பங்கேற்றனர். 2500-க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பாக சிறந்த மாடு பிடி வீரராக வெற்றி பெற்ற பூந்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. அபி சித்தர்-க்கு (26 காளைகள்) பரிசாக கார் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பில் சிறந்த காளையாக வெற்றி பெற்ற புதுக்கோட்டை கைக்குறிச்சி காளையின் உரிமையாளர் திரு.தமிழ்செலவன்

அவர்களுக்கு பரிசாக கார் வழங்கப்பட்டது. அதேபோல இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு பெறும் வீரர்கள், காளைகளுக்கு முறையே பைக்குகள் பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர். பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள், விலங்குகள் நல வாரிய உறுப்பினர் திரு.மிட்டல் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர்,இ.ஆ.ப., அவர்கள், திரைப்பட நடிகர் திரு.சூரி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.தளபதி (மதுரை வடக்கு), திரு.ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), திரு.மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), திருமதி தமிழரசி (மானாமதுரை) உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in